மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு கோருரிமை தீர்ப்பாயம், கும்பகோணம்

(கூடுதல் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கும்பகோணம்)

முன்னிலை - **திரு. G. மணிகண்டராஜா, பி.ஏ., பி.எல்.,**

தீர்ப்பாய நீதிபதி (கூடுதல் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிபதி) கும்பகோணம்

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் தேதி திங்கட்கிழமை

**எம்.சி.ஓ.பி எண். 80/2021**

**CNR No.TNTJ190001312025**

அறிவழகன், த/பெ. காளிமுத்து, வயது 36, மேலத்தெரு,
நமச்சிவாயபுரம், ஆடுதுறை, திருவிடைமருதூர் தாலுக்கா. ..... மனுதாரர்

-எதிர்-

1) கிரிஜா, க/பெ. ரவிச்சந்திரன், 93, மகாதான தெரு,
திருவிடைமருதூர் தாலுக்கா.
2) கிளை மேலாளர், நியூ இந்தியா அசூரன்ஸ் கம்பெனி லிட்.,
காந்திஜி ரோடு, தஞ்சாவூர் டவுன்.
3) ராஜேஸ்வரி, க/பெ. மனைவி, நெ. 86-116, சுண்ணாம்புக்காரத்தெரு,
பெருஞ்சேரி, மயிலாடுதுறை தாலுக்கா. ..... எதிர்மனுதாரர்கள்

இம்மனு இன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியான விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. சா. இரவீந்திரன் அவர்கள் ஆஜராகியும், 1 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. G. அருண்பிரசாத் அவர்கள் ஆஜராகியும், 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K. அசோகன் அவர்கள் ஆஜராகியும், 3 ம் எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பியும் ஆஜராகாததால் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டும், இது நாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

## உத்தரவு

மனுதாரருக்கு 06.07.2019 அன்று நடந்த விபத்தினால் ஏற்பட்ட கொடுங்காயங்களுக்காக ரூ.18,00,000/- வட்டியுடன் இழப்பீடு கோரி மோட்டார் வாகன சட்டம் 1988 பிரிவு 163 (ஏ), 166 r/w 3(1) ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>மனுவின் சுருக்கம்</u>:

மனுதாரர் விபத்தின் போது ஆட்டோ மெக்கானிக் வேலை செய்து ரூ.20,000/- வரை சம்பாதித்து வந்தார். கடந்த 06.07.2019 அன்று TN-82-A-4912 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தில் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி கும்பகோணம் - பூம்புகார் சாலையில் சாலையின் இடதுபுறமாக திருவிசநல்லூர் பஞ்சாயத்து ஆபீஸ் அருகே இரவு சுமார் 7.30 மணியளவில் சென்று கொண்டிருந்த போது 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN-68-Q-7471 என்ற எண் கொண்ட மாருதி கார் வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநர் ஆரன் அடிக்காமலும், அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும், முரட்டு தனமாகவும் ஓட்டி வந்து மனுதாரர் மீது மோதியுள்ளார். விபத்தினால் மனுதாரருக்கு வலது முன்னங்காலில் இரு எலும்பு முறிவு, வலது முன்னங்கையில் சிராய்ப்பு காயங்கள், உடல் முழுவதும் பலத்த காயங்கள் ஏற்பட்டு கும்பகோணம் சுகம் மருத்துவமனையில் 06.07.2019 முதல் 10.07.2019 வரை சிகிச்சை பெற்று விடுவிக்கப்பட்டு, பின் 27.04.2020 முதல் 29.04.2020 வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளார். தற்போது வரை மனுதாரர் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்று வருகிறார். மேற்படி விபத்தில் சம்மந்தப்பட்ட TN-68-Q-7471 என்ற எண் கொண்ட வாகன ஓட்டுனர் மீது திருவிடைமருதூர் காவல் நிலையத்தில் குற்ற எண். 121/2019-ல் இதச பிரிவுகள் 279, 337 -ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட விபத்திற்கு காரணம் 1ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனத்தை ஓட்டிய ஓட்டுனரின் கவனக்குறைவே ஆகும். மேலும் 1ஆம் எதிர்மனுதாரர் விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் உரிமையாளர் என்பதாலும், 2ஆம் எதிர்மனுதாரர் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை காப்புறுதி பெற்றவர் என்பதாலும், 3ம் எதிர்மனுதாரர் மனுதாரர் ஓட்டிய வாகனத்தின் உரிமையாளர் என்பதாலும், 1, 2 எதிர்மனுதாரர்கள் சேர்ந்தோ அல்லது தனித்தோ ரூ.18,00,000/- வட்டியுடன் இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளார்கள்.

3) **<u>1ஆம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்</u>**:

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கு நிலைநிற்கத்தக்கதல்ல. மனுதாரரின் அஜாக்கிரதையும், கவனக்குறைவுமே விபத்திற்கு முழு காரணம். 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் எவ்விதத்திலும் பொறுப்பாக மாட்டார். விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் சென்ற வாகனம் 2ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகனம் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு அது நடைமுறையில் இருந்துள்ளது. விபத்திற்கு மனுதாரர் தான் காரணம். 1ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு எவ்வித இழப்பீடும் வழங்க கடமைப்பட்டவர் அல்ல. 1ம் எதிர்மனுதாரரை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டப்படுகிறது.

4) **<u>2ஆம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்</u>**:

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கு நிலைநிற்கத்தக்கதல்ல. 1ஆம் எதிர்மனுதாரருக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளது என்பதும், 1ஆம் எதிர்மனுதாரரின் வாகனம் 2ஆம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதும் நிரூபிக்கப்பட வேண்டிய அம்சமாகும். 1ஆம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் வாகனத்தை உரிய ஓட்டுநர் உரிமம் இல்லாமல் இயக்கியுள்ளார். உரிய ஓட்டுநர் இல்லாமல் 1ஆம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் வாகனத்தை இயக்கியுள்ளதால் பாலிசி விதி மீறல் ஏற்பட்டுள்ளது. மனுதாரர் போக்குவரத்து மிகுந்த சாலையில் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் வாகனத்தை ஓட்டி 1ஆம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திக் கொண்டார். மேற்கண்ட விபத்தானது 1ஆம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுனரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் ஏற்படவில்லை. மனுதாரர் சில நாட்களே மருத்துவமனையில்

அனுமதிக்கப்பட்டுள்ளார். மனுதாரர் மருத்துவ செலவு செய்தார் என்பது உண்மையல்ல. அதனை மெய்ப்பிக்கக்கூடிய ஆவணங்கள் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. மனுதாரர் கோரியுள்ள இழப்பீட்டு தொகை மற்றும் வட்டி விகிதம் அதிகமாகும். இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கதாகும்.

**5) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள்**:

| | |
|---|---|
| 1) | யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளது? |
| 2) | மனுதாரருக்கு விபத்தினால் ஏற்பட்ட கொடுங்காயங்களுக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் யார்? |
| 3) | மனுதாரருக்கு கிடைக்ககூடிய இழப்பீட்டுத் தொகை எவ்வளவு? |

**6) சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**

மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ம.த.சா.ஆ.1 முதல் ம.த.சா.ஆ.13 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் சான்றாவணங்கள் முன்னிடப்படவில்லை. மனுதாரருக்கு வழங்கப்பட்ட இயலாமை சான்றிதழ் நீதிமன்ற சான்றாவணம் நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் மோட்டார் வாகன சட்டம் பிரிவு 170-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. 3ம் எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு சார்வு செய்யப்பட்டு அவர் ஆஜராகாததால் அவருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**7) பிரச்சனை எண்.1 ற்கான தீர்வு**:

(i) இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனு, எதிருரை, சாட்சி, சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. கடந்த 06.07.2019 அன்று TN-82-A-4912 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தில் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி கும்பகோணம் -

பூம்புகார் சாலையில் சாலையின் இடதுபுறமாக திருவிசநல்லூர் பஞ்சாயத்து ஆபீஸ் அருகே இரவு சுமார் 7.30 மணியளவில் சென்று கொண்டிருந்த போது 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN-68-Q-7471 என்ற எண் கொண்ட மாருதி கார் வாகனத்தை ஓட்டி வந்து ஓட்டுநர் ஆரன் அடிக்காமலும், அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும், முரட்டு தனமாகவும் ஓட்டி வந்து மனுதாரர் மீது மோதியுள்ளார். விபத்தினால் மனுதாரருக்கு வலது முன்னங்காலில் இரு எலும்பு முறிவு, வலது முன்னங்கையில் சிராய்ப்பு காயங்கள், உடல் முழுவதும் பலத்த காயங்கள் ஏற்பட்டு கும்பகோணம் சுகம் மருத்துவமனையில் 06.07.2019 முதல் 10.07.2019 வரை சிகிச்சை பெற்று விடுவிக்கப்பட்டு, பின் 27.04.2020 முதல் 29.04.2020 வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளார் என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட விபத்திற்கு 1 ஆம் எதிர்மனுதாரர் ஓட்டுனரின் அதிவேகமும், கவனக்குறைவும் காரணம் என்றும் காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளது என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. 1 ஆம் எதிர்மனுதாரரின் வாகனத்தை ஓட்டிய ஓட்டுநருக்கு உரிய ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் காப்பீட்டு பாலிசி விதி மீறல் ஏற்பட்டுள்ளது என்றும், 2 ஆம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றும், சிகிச்சை தொடர்பான ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், மேற்கண்ட விபத்திற்கு 1 ஆம் எதிர்மனுதாரரின் ஓட்டுனர் காரணம் இல்லை என எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ii) 1 ஆம் எதிர்மனுதாரரின் ஓட்டுனர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றும், மேற்படி வாகனத்திற்கு காப்பீட்டு பாலிசி உள்ளது என்றும், ஓட்டுனருக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளது என்றும் கற்றறிந்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார். மேற்கண்ட விபத்தானது மனுதாரர் போக்குவரத்து மிகுந்த சாலையில் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும்,

வாகனத்தை ஓட்டியதால் தான் விபத்து ஏற்பட்டது என கற்றறிந்த 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார். மேற்கண்ட விபத்திற்கு மனுதாரரின் அஜாக்கிரதையும், கவனக்குறைவும் மட்டுமே காரணம் என்றும், மனுதாரருக்கு சம்பவ சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும் கற்றறிந்த 2ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார். 1ம் எதிர்மனுதாரருக்கும் மனுதாரருக்கும் ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் 1ம் எதிர்மனுதாரரே இழப்பீடு தொகையை வழங்க கடமைப்பட்டுள்ளார் என்றும், விபத்து சமயத்தில் மனுதாரர் தலைகவசம் அணியவில்லை என்றும் கற்றறிந்த 2ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார்.

(iii) 1 ஆம் எதிர்மனுதாரர் ஓட்டுனரால் தான் விபத்து ஏற்பட்டது என மனுதாரர் புகாரிலும், மனுவிலும் குறிப்பிட்டுள்ளார். ம.சா.ஆ.1/ முதல் தகவல் அறிக்கையில் 1 ஆம் எதிர்மனுதாரரின் ஓட்டுனரின் கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டி வந்து மனுதாரர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மனுவில் 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் வாகனத்தை ஓட்டி வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர் மீது தன்பால் கவனமின்மை விதி பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் கற்றறிந்த 2ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார். 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் சாலையில் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டி மனுதாரர் சென்ற வாகனத்தின் மீது மோதியதாக மனுதாரர் சாட்சியம் அளித்துள்ளார். இவற்றை மறுக்கும் வகையில் விபத்தை நேரில் பார்த்த சாட்சிகள் யாரையும் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் விசாரணை செய்யப்படவில்லை.

(iv) மனுதாரர் தரப்பில் மேற்கண்ட விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் நிகழ்ந்துள்ளது என்பதை நிரூபிக்கும் வண்ணம் ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. புகாரானது 1ம்

எதிர்மனுதாரரின் ஓட்டுநருக்கு எதிராக கொடுக்கப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டி வந்து மோதியதாக ம.சா.1 சாட்சியம் அளித்துள்ளார். மேற்கண்ட விபத்தில் பாதிக்கப்பட்ட ம.சா.1ன் சாட்சியத்தை மறுக்கும் வகையில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. மனுதாரர் தரப்பு சாட்சியத்தை மறுக்கும் வகையில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் நேரடி சாட்சிகள் முன்னிடப்படவில்லை. ம.சா.1ன் சாட்சியம், முதல் தகவல் அறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் மேற்கண்ட விபத்திற்கு 1ஆம் எதிர்மனுதாரர் ஓட்டுனர் தான் காரணம் என பிரச்சனை 1ற்கு இத்தீர்ப்பாயத்தால் தீர்வு காணப்படுகிறது.

8) **பிரச்சனை எண். 2**

(i) மனுதாரருக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர்கள் யார் என்பது தீர்மானிக்க வேண்டிய பிரச்சனையாகும். 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் அஜாக்கிரதையாலும், கவனக் குறைவாலும் விபத்து ஏற்பட்டது என்றும், 1ம் எதிர்மனுதாரரின் வாகனம் 2ம் எதிர்மனுதாரரான காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றும், 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளார் என்றும் மனுதாரர் தரப்பில் வாதம் முன்வைக்கப்பட்டது. 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ம.சா.ஆ.3 ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. விபத்து 06.07.2019ல் நிகழ்ந்துள்ளது. காப்பீடு பாலிசி 13.10.2018ல் இருந்து 12.10.2019 வரை நிலுவையில் இருந்துள்ளது. விபத்து சமயத்தில் பாலிசி நிலுவையில் உள்ளது நிரூபிக்கப்பட்டுள்ளது.

(ii) 1ஆம் எதிர்மனுதாரரின் ஓட்டுநருக்கு விபத்து சமயத்தில் உரிய ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் 2ஆம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு வழங்க கடமைப்பட்டது அல்ல என்று கற்றறிந்த 2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர்

வாதிட்டார். மனுதாரர் தரப்பில் 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் சந்தோஷ்குமார் என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் இருப்பது குறித்து ம.சா.ஆ.3 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே மனுதாரருக்குரிய இழப்பீட்டு தொகையை 2ஆம் எதிர்மனுதாரர் பகர பொறுப்பின் அடிப்படையில் வழங்க கடமைப்பட்டுள்ளார் என பிரச்சனை எண்.2-ற்கு தீர்வு காணப்படுகிறது.

9) **பிரச்சனை எண்.3-ற்கான தீர்வு**:

விபத்து சமயத்தில் மனுதாரர் மெக்கானிக் வேலை செய்து மாதம் ரூ.20,000/- சம்பாதித்து வந்துள்ளார் என்று மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்திலும் கூறப்பட்டுள்ளது. விபத்தினால் மனுதாரருக்கு வலது முன்னங்காலில் இரு எலும்பு முறிவு, வலது முன்னங்கையில் சிராய்ப்பு காயங்கள், உடல் முழுவதும் பலத்த காயங்கள் ஏற்பட்டு கும்பகோணம் சுகம் மருத்துவமனையில் 06.07.2019 முதல் 10.07.2019 வரை சிகிச்சை பெற்று விடுவிக்கப்பட்டு, பின் 27.04.2020 முதல் 29.04.2020 வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளார் என்றும் ம.சா.ஆ. 5, 6 கும்பகோணம் சுகம் மருத்துவமனையில் வழங்கப்பட்ட விடுவிப்பு சான்று மூலம் அறிய முடிகிறது.

மனுதாரருக்கு கொடுங்காயங்கள் ஏற்பட்டு மருத்துவக்குழுமத்தில் ஆஜராகி 13 சதவீதம் இயலாமை ஏற்பட்டுள்ளது என்று சான்று வழங்கப்பட்டதாக கற்றறிந்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார். மனுதாரருக்கு 40 வயது என்றும், அவருக்கு ஏற்பட்ட ஊனம் குறைய வாய்ப்புள்ளது என்றும், ம.சா.ஆ.7, 8ன் அடிப்படையில் மருத்துவ செலவினங்களுக்கு இழப்பீட்டு தொகை வழங்க இயலாது என்றும் கற்றறிந்த 2ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார்.

**10) கொடுங்காயத்திற்கான இழப்பீடு**

மருத்துவ குழுமம் மனுதாரரை பரிசோதித்து வழங்கிய இயலாமை சான்று நீ.ம.சா.ஆ.1 ல் மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள ஊன விழுக்காடு 13% என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மனுதாரருக்கு ஏற்பட்ட கொடுங்காயங்களுக்காக இயலாமையாக 13 சதவீதம் நிர்ணயிக்கப்படுகிறது. விபத்து 06.07.2019 ல் நிகழ்ந்துள்ளது. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் Rajendran Vs. Harish Babhu என்ற வழக்கில் பிறப்பிக்கப்பட்ட முன் தீர்ப்பு நெறியை பின்பற்றி 1 சதவீத ஊனத்திற்கு ரூ.9,000/- நிர்ணயித்தால் சரியானதாக இருக்கும் என தீர்மானிக்கப்படுகிறது. மேற்கண்ட தீர்ப்பு இவ்வழக்கிற்கு பொருந்தும் என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது. எனவே நிரந்தர இயலாமைக்கான இழப்பீடு 13 X 9,000 = ரூ.1,17,000/- (ரூபாய் ஒரு லட்சத்து பதினேழாயிரம்) என நிர்ணயிக்கப்படுகிறது.

**11) வலி மற்றும் துன்பம்**

விபத்தினால் மனுதாரருக்கு வலது முன்னங்காலில் இரு எலும்பு முறிவு, வலது முன்னங்கையில் சிராய்ப்பு காயங்கள், உடல் முழுவதும் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளது. எனவே, வலி மற்றும் துன்பம் அதிகமாக இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே வலி மற்றும் துன்பத்திற்கு ரூ.40,000/- (ரூபாய் நாற்பதாயிரம்) நிர்ணயிக்கப்படுகிறது.

**12) வசதி இழப்பிற்கான செலவு**

விபத்தினால் மனுதாரருக்கு வலது முன்னங்காலில் இரு எலும்பு முறிவு, வலது முன்னங்கையில் சிராய்ப்பு காயங்கள், உடல் முழுவதும் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளதாலும், அவருக்கு செயல்திறன் இயலாமை 13 சதவீதம் என்று மருத்துவக் குழுமம் சான்று வழங்கியுள்ளதாலும், மனுதாரருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளதாலும்

மனுதாரருக்கு வசதி குறைவு ஏற்படும் என்பதில் ஐயம் இல்லை. மேலும், மனுதாரருக்கு வழங்கப்பட்ட விடுவிப்பு சான்றை பரிசீலனை செய்கையில் காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு கடுமையான அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாக தெரியவருகிறது. மேற்கண்ட விபத்தானது 06.07.2019 ல் நிகழ்ந்து மருத்துவக்குழுமம் 13.10.2025 ல் பரிசோதனை செய்தும் செயல்திறன் இயலாமை 13 சதவீதம் என்று குறிப்பிட்டு இருப்பதால் வசதி குறைவு மிக அதிகமாகவே உள்ளதாக தெரியவருகிறது. எனவே, வசதி குறைவிற்காக ரூ.50,000/- இழப்பீடாக நிர்ணயிக்கப்படுகிறது.

13) **<u>உதவியாளர் செலவு</u>**

விபத்தினால் மனுதாரருக்கு வலது முன்னங்காலில் இரு எலும்பு முறிவு, வலது முன்னங்கையில் சிராய்ப்பு காயங்கள், உடல் முழுவதும் பலத்த காயங்கள் ஏற்பட்டு அதற்காக 8 நாட்கள் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு இருப்பதாலும் அவருக்கு உதவியாளர் தேவைப்படும் என்பதில் ஐயமில்லை. எனவே, உதவியாளர் செலவுத்தொகையாக ரூ.10,000/- நிர்ணயிக்கப்படுகிறது.

14) **<u>ஊட்டச்சத்து உணவு</u>**

மனுதாரருக்கு விபத்தினால் வலது முன்னங்காலில் இரு எலும்பு முறிவு, வலது முன்னங்கையில் சிராய்ப்பு காயங்கள், உடல் முழுவதும் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளதால் அவருக்கு ஊட்டச்சத்து உணவு தேவைப்படும் என்பதில் ஐயமில்லை. எனவே ஊட்டச்சத்து உணவிற்காக ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம்) நிர்ணயிக்கப்படுகிறது.

15) **<u>போக்குவரத்து செலவு</u>**

மனுதாரருக்கு விபத்து ஏற்பட்டு கும்பகோணம் சுகம் மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளார். மேலும் மனுதாரருக்கு விபத்தினால் வலது

முன்னங்காலில் இரு எலும்பு முறிவு, வலது முன்னங்கையில் சிராய்ப்பு காயங்கள், உடல் முழுவதும் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளதால் பல முறை மருத்துவமனைக்கு சென்று வந்திருக்க வேண்டியிருந்திருக்கும். அதனை கருத்தில் கொண்டு போக்குவரத்து செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம்) வழங்கப்படுகிறது.

16) <u>வருமான இழப்பு</u>

விபத்தினால் ஏற்பட்ட இயலாமைகளாலும், வலது முன்னங்காலில் இரு எலும்பு முறிவு, வலது முன்னங்கையில் சிராய்ப்பு காயங்கள், உடல் முழுவதும் பலத்த காயங்கள் மற்றும் எலும்பு முறிவினாலும் குறைந்தபட்சம் நான்கு மாதங்கள் மனுதாரர் ஓய்வில் இருந்திருக்க வேண்டியிருக்கும். எனவே மேற்கண்ட விபத்தானது 06.07.2019 அன்று நிகழ்ந்துள்ளதால் மாத உத்தேச வருமானமாக ரூ.12,000/- (ரூபாய் பன்னிரெண்டாயிரம்) நிர்ணயிக்கப்பட்டு, அந்த நான்கு மாத வருமான இழப்பிற்காக 4 X 12,000 = 48,000/- (ரூபாய் நாற்பத்து எட்டாயிரம்) என நிர்ணயிக்கப்படுகிறது.

17) <u>மருத்துவ செலவு</u>

மனுதாரர் விபத்தினால் வலது முன்னங்காலில் இரு எலும்பு முறிவு, வலது முன்னங்கையில் சிராய்ப்பு காயங்கள், உடல் முழுவதும் பலத்த காயங்கள் ஏற்பட்டது என்றும், மருத்துவ செலவுத் தொகைகளுக்கான ரசீதுகள் ம.சா.ஆ.7, 8, 11 ஆக மனுதாரர் தாக்கல் செய்யதுள்ளார். அதில் மனுதாரரின் பெயர் குறிப்பிடாத பில்களை பொறுத்து மனுதாரர் இழப்பீடு பெற உரிமையற்றவர் ஆவார். கணினி ரசீதில் கையால் எழுதப்பட்ட தொகை குறித்து உரிய மருத்துவரின் சீட்டு இல்லாததால் கையால் எழுதப்பட்ட தொகை, Refund தொகை, முன்தொகை மட்டும் நிராகரிக்கப்படுகிறது. எஞ்சிய ரசீதுகளை பொறுத்து மருத்துவ செலவிற்காக ரூ.63,554/- (ரூபாய் அறுபத்து மூன்றாயிரத்து ஐநூற்று ஐம்பத்து நான்கு மட்டும்) வழங்கப்படுகிறது.

18) **உடைகள் இழப்பிற்கான செலவு**

விபத்தின் போது ஏற்பட்ட உடைகளுக்கான சேத இழப்பீடு ரூ.3,000/- (ரூபாய் மூன்றாயிரம்) என நிர்ணயம் செய்யப்படுகிறது. இதன் அடிப்படையில் கீழ்கண்டவாறு இழப்பீடு தீர்மானிக்கப்படுகிறது.

| **வ.எண்** | **இழப்பீடு தலைப்புகளில்** | **தொகை (ரூபாயில்)** |
|---|---|---|
| 1. | கொடுங்காயத்திற்கான இழப்பீடு | 1,17,000/- |
| 2 | வலி மற்றும் துன்பத்திற்காக | 40,000/- |
| 3 | வசதி இழப்பிற்காக | 50,000/- |
| 4 | உதவியாளர் செலவிற்காக | 10,000/- |
| 5 | ஊட்டச்சத்து உணவிற்காக | 10,000/- |
| 6 | போக்குவரத்து செலவிற்காக | 10,000/- |
| 7 | வருமான இழப்பிற்காக | 48,000/- |
| 8 | மருத்துவ செலவிற்காக | 63,554/- |
| 9 | உடைகள் இழப்பிற்காக | 3,000/- |
| | கூடுதல் | 3,51,554/- |

மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் மனுதாரர் மொத்த இழப்பீடாக ரூ.3,51,554/- (ரூபாய் மூன்று லட்சத்து ஐம்பத்து ஓராயிரத்து ஐநூற்று ஐம்பத்து நான்கு மட்டும்) கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் பிரச்சனை எண்.3-ற்கு தீர்வு காண்கிறது.

1) இறுதியாக, இம்மனு பகுதியாக அதற்குரிய விகிதாச்சார செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

2) 2 ஆம் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு ரூ.3,51,554/- (ரூபாய் மூன்று லட்சத்து ஐம்பத்து ஓராயிரத்து ஐநூற்று ஐம்பத்து நான்கு மட்டும்) மற்றும் அதற்குரிய வட்டி மற்றும் செலவுத் தொகையை வழங்க உத்தரவிடப்படுகிறது. 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது.

3) இழப்பீட்டுத் தொகையினை மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து ஆண்டிற்கு 7.5% பின் வட்டியும் மற்றும் செலவுத்தொகையும் சேர்த்து 2 ஆம் எதிர்மனுதாரர் இரண்டு மாத காலத்திற்குள் இத்தீர்ப்பாயத்தின் வங்கி கணக்கில் அதாவது Additional Chief Judicial Magistrate Court, Kumbakonam in MACTOP Account No.17970100009585, I.O.B. Court Branch, Kumbakonam directly by NEFT or RTGS மூலம் வைப்பீடு செய்ய உத்தரவிடப்படுகிறது.

4) மனுதாரர் இந்நீதிமன்றத்தில் அவரது வங்கி கணக்கினை 10 நாட்கள் அவகாசத்தில் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது.

5) மனுதாரருக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகைக்கான குறைவுபடும் நீதிமன்ற கட்டணம் ரூ. 2415 /- ஐ 15 நாட்களுக்குள் செலுத்த உத்தரவிடப்படுகிறது.

6) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் R.O.C. No.390-A/2014/F1 dated 13.02.2014-ல் பிறப்பித்துள்ள உத்தரவுபடி தனியாக தீர்ப்பாணை வனையப்படவில்லை.

| | |
|---|---|
| மனு தாக்கலான நாள் | 23.12.2020, 27.04.2021 |
| மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | 29.04.2021 |
| கோரப்பட்டுள்ள இழப்பீட்டு தொகை | ரூ.18,00,000/- |
| வழங்கப்பட்டுள்ள இழப்பீட்டு தொகை | ரூ. 3,51,554 /- |
| மனுவில் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் | ரூ.100/- |
| இழப்பீட்டிற்கான நீதிமன்ற கட்டணம் | ரூ.2515 /- |
| மனுதாரர் செலுத்த வேண்டிய நீதிமன்ற கட்டணம் | ரூ. 2415/- |

**<u>செலவுத்தொகை பட்டியல்</u>**:

| தலைப்பு | மனுதாரர் | 1 ஆம் எதிர்மனுதாரர் | 2 ஆம் எதிர்மனுதாரர் |
|---|---|---|---|
| நீதிமன்ற கட்டணம் | ரூ. 2515 /- | - | - |

| | | | |
|---|---|---|---|
| வக்காலத்து | ரூ.10/- | ரூ.10/- | ரூ.10/- |
| வழக்கறிஞர் ஊதியம் | ரூ.19531/- | ரூ. 19531 /- | ரூ. 19531 /- |
| கூடுதல் | ரூ. 22056/- | ரூ. 19541 /- | ரூ. 19541 /- |

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் நாள் அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

G. MANIKANDARAJA

Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2026.03.23 14:35:22 +0530

கூடுதல் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிபதி,

கும்பகோணம்.

| | |
|---|---|
| **மனுதாரர் தரப்பு சாட்சிகள்**: | |
| ம.சா.1 | அறிவழகன் |
| **மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்**: | |
| ம.த.சா.ஆ.1 | 09.07.2019 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை பதிவிறக்க நகல் |
| ம.த.சா.ஆ.2 | TN-82-A-4912 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை பதிவிறக்க நகல் |
| ம.த.சா.ஆ.3 | TN-68-Q-7471 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை பதிவிறக்க நகல் |
| ம.த.சா.ஆ.4 | Sugam Multi speciality Hospital ஆய்வக அறிக்கைகள் எண்ணிக்கை 4 அசல் |
| ம.த.சா.ஆ.5 | 10.07.2019 தேதியிட்ட Sugam Multi speciality Hospital வழங்கிய டிஸ்சார்ஜ் சம்மரி அசல் |
| ம.த.சா.ஆ.6 | 29.04.2020 தேதியிட்ட Sugam Multispeciality Hospital வழங்கிய டிஸ்சார்ஜ் சம்மரி அசல் |
| ம.த.சா.ஆ.7 | Sugam Multispeciality Hospital வழங்கிய பில்-2 அசல் |
| ம.த.சா.ஆ.8 | மருந்து வாங்கிய பில் எண்ணிக்கை 58 அசல் |
| ம.த.சா.ஆ.9 | 29.04.2020 தேதியிட்ட Sugam Multispeciality Hospital வழங்கிய மருந்து |

| | |
|---|---|
| | சீட்டுகள் எண்ணிக்கை 8 அசல் |
| ம.த.சா.ஆ.10 | எக்ஸ்ரே எண்ணிக்கை 4 அசல் |
| ம.த.சா.ஆ.11 | மருந்து வாங்கிய பில் எண்ணிக்கை அசல் |
| ம.த.சா.ஆ.12 | மனுதாரரின் ஆதார் அட்டை நகல் |
| ம.த.சா.ஆ.13 | மனுதாரின் வங்கி கணக்கு புத்தகம் முதல் பக்க நகல் |
| **நீதிமன்ற சான்றாவணம்** | |
| நீ.ம.சா.ஆ.1 | ஊனச்சான்றிதழ் |
| **2 ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும்சான்றாவணங்கள் : இல்லை** | |

G. MANIKANDARAJA

Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2026.03.23 14:35:16 +0530

கூடுதல் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிபதி,

கும்பகோணம்.